சார்பு நீதிமன்றம், குளித்தலை

OS.No. **97 / 2017**

பெயர்: சுந்தரராஜன் வா.சா.1 தேதி **18.02.2026**

மூன்றாவது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. வாதி ஒரு அறக்கட்டளை. அறக்கட்டளை என்பது ஆவணத்தின் வாயிலாக தான் உருவாக்கவேண்டும். வா.சா.ஆ-1 ஆவணத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டது தான் வாதியின் அறக்கட்டளை. அறக்கட்டளை ஒன்று இருக்கும்பட்சத்தில் அதில் தீர்மானங்களை எழுதுவதற்காக புத்தகம் ஒன்று இருக்கும் என்றால் சரிதான். மேற்படி அறக்கட்டளை சம்மந்தமாக தீர்மானம் எழுதக்கூடிய புத்தகம் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. நான் மேற்படி அறக்கட்டளைக்கு செயலாளர். மேற்படி அறக்கட்டளையில் என்னை சேர்த்து 6 பேர்கள். மேற்படி அறக்கட்டளையை அரசாங்கத்தில் வேறு காரணங்களுக்காக பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் வருமானவரி சட்டப்பிரிவு 80 G -யின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி அறக்கட்டளை மருத்துவ ஆராய்ச்சிக்கான மருந்து தயாரிப்பிற்காக துவங்கப்பட்டது. மேற்படி மருத்துவ ஆராய்ச்சி செய்வதற்கு IC MR-யில் அனுமதி வாங்கவேண்டும் என்றால் அனுமதி வாங்கியதாக சொன்னார், எனக்கு நேரடியாக தெரியாது. மணிகண்டன் சொன்னார். வருமானவரி சட்டப்பிரிவு 80 G -யின் எப்பொழுது பதிவு செய்யப்பட்டது என்றால் தேதி தெரியாது. ஆனால் ஆவணங்களை பார்த்துள்ளேன். மேற்படி வருமானவரி சட்டப்பிரிவு 80 G ஒவ்வொரு ஐந்து வருடத்திற்கும் மற்றும் துறையினர் கேட்கும்பட்சத்தில் புதுப்பிக்கப்படவேண்டும் என்றால் சரிதான்.

2. மேற்படி IC MR பதிவு என்பது வருடத்திற்கு ஒரு முறை செய்யவேண்டும் என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தில் மூலிகை சம்மந்தமான செடிகளை பயிரிட்டு வருகிறோம் என்று சொல்லி கட்சி செய்து வருகிறோம். மேற்படி மூலிகை செடிகளை பயிரிடவேண்டும் என்றால் எந்த அரசின், எந்த துறையில் பதிவு செய்யவேண்டும் என்று தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி நான் சார்ந்துள்ள அறக்கட்டளையில் உள்ள 6 பேரும் மருத்துவரா என்றால் ஒருவர் (கிருத்திகா) மட்டும் மருத்துவர். மேற்படி கிருத்திகா மேற்படி மணிகண்டனின் மகள், மேற்படி டாக்டர் கிருத்திகா சித்த மருத்துவம் படித்தவர். மேற்படி அறக்கட்டளையின் அலுவலகம் சென்னையில் உள்ள வீராசெட்டி தெருவில் உள்ளது. மேற்படி அறக்கட்டளையை சேர்ந்த 6 நபர்களும் வெவ்வேறு ஊரில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். குளித்தலையில் மேற்கண்ட 6 நபர்களும் வசிக்கவில்லை. மேற்படி அறக்கட்டளையில் இருந்து மருத்துவ கல்லூரியோ, ஆராய்ச்சி கூடங்களோ, மருத்துவமனைகளோ நடைபெறுகிறதா என்றால்

மருத்துவமனை நடைபெற்றுவருகிறது. மேற்படி மருத்துவமனை எங்கு உள்ளது என்றால் அறக்கட்டளையின் அலுவலகம் இருப்பதாக கூறக்கூடிய முகவரியில் உள்ளது.

3. மேற்படி மருத்துவமனை என்பது மருத்துவர் கிருத்திகா என்பவருக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டதா அல்லது அறக்கட்டளைக்கு பாத்தியப்பட்டதா என்றால் அறக்கட்டளை சார்பாக மருத்துவர் கிருத்திகா சிகிச்சை அளித்து வருகிறார். மருத்துவமனையின் உரிமையாளர் அறக்கட்டளையா அல்லது மருத்துவர் கிருத்திகாவா என்றால் மேற்படி அறக்கட்டளையும் உரிமையாளர் தான் மருத்துவரும் உரிமையாளர் தான். மேற்படி மருத்துவமனையினை அறக்கட்டளை நடத்தி வரப்படுகிறது என்பதற்காக ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. ஆவணங்களை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். குளித்தலை வட்டார பகுதியில் அறக்கட்டளைக்காக மருத்துவமனை உள்ளதா என்றால் இல்லை. அறக்கட்டளையில் தனியாக பொருளாளர் என்கின்ற பதவி உள்ளதா என்றால் இல்லை. 6 உறுப்பினர்களுமே கணக்குகளை பார்த்துக்கொள்வோம். எனக்கு மேற்படி கணக்குகளில் என்ன பொறுப்பு என்றால் வழக்கு சொத்து சம்மந்தமான கணக்குகளை பார்த்துக்கொள்ளவேண்டிய கணக்கு. மேற்படி கணக்குகளை நான் தனியாகவே பார்த்துக்கொள்வேன். மேற்படி கணக்கு வழக்கு சம்மந்தமான ஆவணங்கள் என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது.

4. வருமானவரி சட்டப்பிரிவு 80 G -யின் பதிவு செய்திருந்தால் வருமானவரி சட்டத்தின் படி தணிக்கையாளரால் கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டு தாக்கல் செய்யப்படவேண்டும் என்றால் சரிதான். அவ்வாறே IC MR பதிவு செய்துவைத்திருந்தால் அதனையும் வருடத்திற்கு ஒருமுறை என்ன ஆராய்ச்சி செய்தோம் என்கின்ற விவரத்தை அரசுக்கு தெரிவிக்கவேண்டும் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. 2006ல் இருந்து நாளது தேதி வரை மேற்படி வழக்கு சொத்தில் ஏதேனும் மூலிகை ஆராய்ச்சி செய்துள்ளோமா என்றால் 2016, 2017ம் ஆண்டு வரை செய்தோம். மேற்படி ஆராய்ச்சி சம்மந்தமான ஆவணங்கள் எங்களிடம் உள்ளதா என்றால் அறக்கட்டளையில் கேட்டு சொல்லமுடியும். வழக்கு சொத்தில் உண்மையிலேயே நாங்கள் அனுபவத்தில் இல்லை என்றாலும் ஆராய்ச்சி சம்மந்தமாக மூலிகை பயிர் எதுவும் பயிரிடப்படவில்லை என்றால் சரியல்ல. அதனால் தான் இது தொடர்பான விவரங்கள் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. கடந்த 2017 முதல் நாளது தேதி வரை வழக்கு சொத்து சம்மந்தமாக சொத்து ஆவணங்கள் வைத்துள்ளேனா என்றால் வைத்துள்ளேன்.

5. அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் கலந்து ஆலோசிக்கவேண்டும். மேற்படி கணக்கு வழக்குகளை பார்த்தால்

தான் சொத்து சம்மந்தமாக பயிர் வரவு, பயிர் செலவு மற்றும் இலாபம், நஷ்ட கணக்குகளை பார்க்க முடியும் என்றால் சரிதான். நான் மேலே சொன்ன கணக்கு வழக்குகள் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகள். 2017 முதல் நாளது தேதி வரை வழக்கு சொத்தில் ஏதேனும் மூலிகைகள் தயாரித்தோமா என்றால் நான் 2021ம் ஆண்டு தான் அறக்கட்டளைக்கு பொறுப்புக்கு வருகிறேன். அதன் பின்னிட்டு மூலிகை பயிர் செய்யப்படவில்லை. எந்த காலத்திலும் மூலிகை பயிரிடப்படவில்லை என்றாலும், வழக்கு சொத்தில் எக்காலத்திலும் நாங்கள் அனுபவிக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் முழுமையாக தெரியுமா என்றால் ஓரளவுக்கு தெரியும். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணையில் இரண்டாவது பக்கத்தில் மூன்றாவது வரியில் சில மருத்துவ கண்டுபிடிப்பிற்கு காப்புரிமை பெறப்பட்டுள்ளன என குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி என்ன என்ன மருத்து கண்டுபிடிப்பிற்காக காப்புரிமை பெறப்பட்டது என்றால் எனக்கு பெயர்கள் தெரியாது. நாங்கள் இந்த வழக்கை 16.06.2005ம் தேதியிட்ட குத்தகை ஆவணத்தின் அடிப்படையில் தான் அனுபவத்தில் உள்ளதாக கட்சி செய்து வருகிறோம். அக்காலகட்டத்தில் மேற்படி அறக்கட்டளையில் நான் உறுப்பினராக இல்லை.

6. 2021ம் ஆண்டிற்கு முன்னர் வரை மேற்படி அறக்கட்டளையில் நடைபெற்ற சங்கதிகள் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. 2005ம் ஆண்டில் துவங்கப்பட்ட அறக்கட்டளையின் உறுப்பினர்களில் தற்பொழுது எத்தனை நபர்கள் உயிருடன் உள்ளார்கள் என்றால் ஒருநபர் உள்ளார். அவர் பெயர் ஐயப்பன். மேற்படி ஐயப்பனுக்கு தான் நான் அறக்கட்டளைக்கு உள்ளே வருவதற்கு முன்னர் நடைபெற்ற சங்கதிகள் முழுமையாக தெரியும் என்றால் சரிதான். மேற்படி ஐயப்பனை எங்கள் தரப்பில் சாட்சியாக விசாரிக்கபோகிறோமா என்றால் வழக்கறிஞர் தான் முடிவு செய்வார். மூன்றாவது பிரதிவாதியை பொறுத்து அவர் தான் வழக்கு சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்றும், நாங்கள் அனுபவம்செய்யவில்லை என்றும் கட்சி செய்து வருகிறார் என்றால் சரிதான். மூன்றாவது பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையை படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். குத்தகை பத்திரத்தின் வாயிலாக மூன்றாவது பிரதிவாதி அனுபவம் செய்துவருவதாக கூறப்பட்டுள்ளது. நாளது தேதியில் வழக்கு சொத்தில் என்ன என்ன பயிர்கள் எவ்வளவு விஸ்தீரணத்தில் பயிர் செய்யப்பட்டுள்ளது என்றால் 53 ஏக்கர் தென்னை கன்னு (பயிரிட்டு 2 3/4 வருடங்கள் இருக்கும்) மீதி இடங்கள் தரிசாக உள்ளது. வழக்கு சொத்தில் 65 ஏக்கர் ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட தென்னை மரங்களும், மீதி இடங்களில் கடலை முதலிய புன்செய் பயிர்கள் மூன்றாவது பிரதிவாதியால் பயிரிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

7. வழக்கு சொத்தில் எத்தனை கிணறு உள்ளது என்றால் ஒன்று உள்ளது. மேற்படி வழக்கு சொத்தில் கிணறு இல்லை என்றாலும் ஆழ்துளை கிணறு உள்ளது என்றால் சரியல்ல. மூன்றாவது பிரதிவாதி வழக்கு சொத்தில் 5 ஆழ்துளை கிணறு அமைத்து விவசாயம் செய்து வருகிறார் என்றாலும், வழக்கு சொத்தை நாங்கள் அனுபவிக்கவில்லை என்பதால் தான் மேற்படி சங்கதி எனக்கு தெரியவில்லை என்றாலும் சரியல்ல. நாங்கள் நடப்பட்டதாக கூறக்கூடிய தென்னை கன்றுகள் சதுர முறைப்படியிலா அல்லது முக்கோண வடிவிலா, எத்தனை அடிக்கு இடைவெளி விடப்பட்டுள்ளது என்றால் இரண்டு தென்னை மட்டையின் அளவுகளை பொறுத்தும், கயிறுகளை கொண்டு அளந்தும் தென்னை கன்றுகள் நடப்படும். எங்களுக்கு தென்னை பயிரிடவே தெரியாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிராதில் மூலிகை பயிர் பயிரிட்டு இருப்பதாக தான் குறிப்பிடப்பட்டுள்ளதை தவிர தென்னை மரம் பயிரிட்டு இருப்பதாக குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் வழக்கு தாக்கல் செய்த காலகட்டத்தில் இருந்ததை கூறியுள்ளோம். மேற்படி சங்கதியை முதல் விசாரணையிலும் தெரிவிக்கவில்லை என்றால் ஞாபகம் இல்லை. நாங்கள் எவ்வித பயிரும் செய்யவில்லை என்பதால் தானும், மூன்றாவது பிரதிவாதி மேற்படி பயிர் செய்துள்ளதாலும் தான் மேற்படி சங்கதியை ஞாபகம் இல்லை என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. பரமத்தி மற்றும் குளித்தலை பகுதியில் உள்ள நிலத்தடி தண்ணீர் மாறுபட்டுதான் இருக்கும் என்றால் ஆமாம். எங்கள் ஊரில் சுமார் 100 அடியில் தண்ணீர் வந்துவிடும்.

8. நிலத்தடி நீரின் அளவு என்பது எல்லா ஊர்களிலும் ஒரே அளவாக இருக்காது என்றால் சரிதான். வழக்கு சொத்தில் எத்தனை அடியில் ஆழ்துளை அமைத்ததால் தண்ணீர் வரும் என்றால் 150 – 200 அடிக்குள் தண்ணீர் வரும். 25 HP மோட்டார் வைத்து கிணற்றில் இருந்து தண்ணீர் எடுத்துவருவதாக பிராதில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். கிணற்றின் ஆழம் எவ்வளவு என்றால் சுமார் 42 அடி. அகலம் எவ்வளவு என்றால் 40க்கு 25 அடி இருக்கும். கிணற்றை நாங்கள் தோன்டினோமா என்றால் முதல் பிரதிவாதி பாதி அளவு தோன்டி வைத்திருந்தார் மீதியே நாங்கள் தோன்டினோம். மேற்படி கிணற்றில் உள்ள தண்ணீரின் அளவை விட அதிகமாக தண்ணீரை உரிஞ்சும் பட்சத்தில் கிணறு சரிந்துவிடும் என்றால் மண்ணின் கெட்டி தன்மையை பொறுத்தது. நான் மேலே சொன்னமாதிரி அளவுள்ள கிணற்றில் தண்ணீரை மேலே சொன்ன அளவுள்ள மோட்டாரினை வைத்து தண்ணீர் எடுக்கும் பட்சத்தில் கிணற்றின் சுவர் சரிந்துவிடும் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் நான் சொன்னமாதிரி கிணறு இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கு வடபுறத்தில் மூன்றாவது பிரதிவாதிக்கு சொந்தமான சொத்து உள்ளது என்றால் சரிதான்.

9. மேற்படி மூன்றாவது பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்திற்கும் வழக்கு சொத்திற்கும் சேர்த்து ஒருங்கிணைக்கப்பட்ட தண்ணீர் பாய்ச்சு அமைப்பு உள்ளது என்றாலும், அதனை வைத்து மூன்றாவது பிரதிவாதி மொத்த சொத்தையும் அனுபவம் செய்துவருகிறார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை பார்வையிடவேண்டி மூன்றாவது பிரதிவாதி ஆணையர் நியமணம் செய்யகோரி மனு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். மேற்படி மனுவானது தள்ளுபடி ஆகிவிட்டது. மேற்படி ஆணையர் நியமணம் செய்யகோரிய மனுவில் ஆணையர் சென்று பார்த்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதால் தான் மேற்படி ஆணையர் நியமணம் செய்யகோரிய மனுவிற்கு ஆட்சேபணை தெரிவித்தோம் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து சம்மந்தமாக இரண்டு முறை என் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். நாங்களும் புகார் கொடுத்து அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மூன்றாவது பிரதிவாதி என்மீது கொடுத்த புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட இரண்டு வழக்குகளும் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது. நாங்கள் கொடுத்த புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் பேரில் தொடரப்பட்ட வழக்குகளானது பிழையுடைய வழக்கு என முடிவு செய்யப்பட்டுவிட்டது என்று சொன்னால் மேற்படி வழக்கு என்ன ஆனது என்று தற்பொழுது எனக்கு ஞாபகம் இல்லை.

10. மேற்படி நாங்கள் கொடுத்த புகாரின் அடிப்படையில் குளித்தலை நீதிதுறை நடுவர் எண்.2-யில் கு.வி.மு.ச பிரிவு 156 (3) -யின் கீழ் மனு தாக்கல் செய்திருந்தோம் என்றால் சரிதான். மேற்படி உத்தரவின் அடிப்படையில் மாவட்ட காவல் துறை துணை கண்காணிப்பாளர் மீண்டும் விசாரணை செய்து மீண்டும் பிழையுடைய வழக்கு என முடிவு செய்யப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. குற்ற எண். 300/2022 வழக்கிற்கு கரூர் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் எதிர் நோக்கு பிணை மனு தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கானது வழக்கு சொத்தின் வேலியை அடித்து உடைத்ததற்காக பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். ஆனால் அது பொய் வழக்கு. மேற்படி வழக்கில் மேற்படி நீதிமன்றம் 35,000/-த்தை வைப்பீடு செய்ய உத்தரவிட்டு, வைப்பீடு செய்தேன் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் மூன்றாவது பிரதிவாதி தான் அனுபவம் செய்துவருவதாகவும், நாங்கள் மூன்றாவது பிரதிவாதியின் அனுபவத்தினை இடையூறு செய்ததாகவும் புலன் விசாரணை அதிகாரிகள் சம்பவ இடத்தை பார்வையிட்டு அதன் அடிப்படையில் தான் மேற்படி வழக்கை முடிவுக்கு கொண்டுவந்தார்கள் என்றால் சரியல்ல. போலீசார் விசாரிக்கவே இல்லை. மேற்படி சம்பவத்திற்கு பின்னிட்டு 8 மாதங்கள் கழித்து நான் மூன்று வண்டிகளில் நபர்களை அழைத்துக்கொண்டு வழக்கு சொத்திற்குள்

அத்துமீறி நுழைந்து அங்கு இருக்கும் பொருட்களை சேதப்படுத்தியுள்ளதாக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

11. மேற்படி பொருட்களை சேதப்படுத்தியதற்காக எங்களது மூன்று வண்டிகளையும் போலீசார் கைப்பற்றினார் என்றால் போலீசார் மேற்படி மூன்று வண்டிகளையும் கைப்பற்றினார்கள். மேற்படி வழக்கில் எனக்கு பிணை மனு வழங்கி நான் ஜீயபுரம் காவல் நிலையில் நிபந்தனை கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். 2005ம் தேதியிட்ட குத்தகை பத்திரத்தில் எங்களுக்கு குத்தகை தரப்பட்டதாக சொல்லப்படும் சொத்தின் சர்வே எண் என்வென்றால் 957 A / 1A2A. எங்களுக்கு குத்தகை விடப்பட்டதாக சொல்லக்கூடிய சொத்து எந்த கிராமத்தில் எந்த உட்பிரிவில் உள்ளது என்றால் நாங்கள் பதிவு செய்தபொழுது நங்கவரம் தெற்கு, இரண்டு என்று இருந்தது. 2012-ல் EC பார்த்தபொழுது தெற்கு இரண்டு என்று தான் இருந்தது. நாங்கள் குத்தகைக்கு எடுத்ததாக கூறும் சொத்தானது எந்த கிராமத்தில் எந்த பிரிவில் உள்ளது என்றால் நங்கவரம் தெற்கு 2-ல் தான் இருந்தது. நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.6 ஆவணத்தில் நங்கவரம் தெற்கு டிவிசன் இரண்டு என குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் சொத்து விபரத்தில் நங்கவரம் தெற்கு பாகம் 1 என குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். 3-வது பிரதிவாதி தாக்கல் செய்துள்ள குத்தகை பத்திரத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். மேற்படி பத்திரத்தில் நங்கவரம் தெற்கு பாகம் 1 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தின் சரியான இருப்பிடம் நங்கவரம் தெற்கு பாகம் 1 என்றால் தற்போது சரிதான். எல்லா காலக்கட்டத்திலும் வழக்கு சொத்து நங்கவரம் தெற்கு பாகம் 1-ல் தான் உள்ளது என்றால் சரியல்ல. எக்காலத்திலும் பாகம் 2-ல் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6-ல் கண்டுள்ள சொத்தின் விபரத்தை பிராதில் ஏன் மாற்றி கூறியுள்ளேன் என்பதற்கு எவ்வித விளக்கத்தினையும் பிராதில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

12. பிரதிவாதிகளையும் நீதிமன்றத்தை ஏமாற்ற வேண்டும் என்பதற்காக தான் மேற்கூறியவாறு மாற்றி கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. 3-வது பிரதிவாதி வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. அ.வ.எண். 249/2006 வழக்கில் தாக்கல் செய்த ஆணையர் அறிக்கையை மேற்படி மூன்றாவது பிரதிவாதி தாக்கல் செய்துள்ளாரா என்றால் தாக்கல் செய்துள்ளார். அதனை படித்து பார்த்துள்ளேன். மேற்படி வழக்கில் மணிகண்டன் இரண்டாவது பிரதிவாதி என்றால் சரிதான். மேற்படி அ.வ.எண். 249/2006 வழக்கின் தீர்ப்பினை எதிர்த்து தான் மே.மு.எண். 13/2018 என இந்நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். மேற்படி அ.வ.எண்.249/2006 வழக்கின் வாதி தான் இந்த வழக்கில் இரண்டாவது

பிரதிவாதி என்றால் சரிதான். மேற்படி வழக்கானது முதலில் ஒருதலைபட்சமாக தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுவிட்டது என்றால் சரிதான். அதற்கு பின்னிட்டு உரிய மனு தாக்கல் செய்யப்பட்டு 27.06.2017ம் ஆண்டு மேற்படி ஒருதலைபட்ச தீர்ப்பாணை ரத்து செய்யப்பட்டது. மேற்படி இடைப்பட்ட காலத்தில் தான் மூன்றாவது பிரதிவாதிக்கு வழக்கு சொத்தை குத்தகைக்கு விடப்பட்டது என்று சொன்னால் சரிதான்.

13. ஆகையால் மூன்றாவது பிரதிவாதி நல்ல எண்ணத்தின் பேரில் செயல்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. முதல் பிரதிவாதியின் அறக்கட்டளை பள்ளி ஒன்று நடத்தி வருகிறார்களா என்றால் தெரியாது. மேற்படி முதல் பிரதிவாதி அறக்கட்டளை சார்பாக பள்ளி ஒன்று நடத்தப்பட்டு வருவதாகவும், மேற்படி பள்ளியின் கட்டிடமானது இடிந்துவிட்டதாலும், அதனை மூன்றாவது பிரதிவாதி தான் சரிசெய்து கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. நாளது தேதிவரை மூன்றாவது பிரதிவாதி தான் முதல் பிரதிவாதிக்கு குத்தகை பணம் செலுத்தி வருகிறார் என்றாலும், நாங்கள் குத்தகை பணம் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. ஆவணங்களை தயாரிப்பதற்காகவே 2022ம் ஆண்டு நீதிமன்றத்தில் குத்தகை பணத்தை செலுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. அதற்கு முந்தைய காலகட்டத்திற்கான குத்தகை பணத்தை செலுத்துவதற்காக மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்தில் எக்காலத்திலும் நாங்கள் அனுபவத்தில் இல்லை என்பதால் தான் குத்தகை பணம் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. மூன்றாவது பிரதிவாதி தான் வழக்கு சொத்தை அ னுபவம் செய்துவருகிறார் என்றால் சரியல்ல. மூன்றாவது பிரதிவாதியிடம் உள்ள சொத்தை கைப்பற்றுவதற்காக இந்த வழக்கையும் தாக்கல் செய்துவிட்டு சொத்தை அடையவேண்டும் என்பதற்காக சட்டத்திற்கு புறமாக செயல்பட்டு வருகிறோம் என்றால் சரியல்ல. இவ்வழக்கானது பொய்யான வழக்கு என்றால் சரியல்ல. வழக்கானது தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.02.18 18:45:16 +0530

சார்பு நீதிபதி

குளித்தலை.